செ.வெ.எண்: 334 நாள்: 07.06.2019

## கஜா புயல் புனரமைப்பு பணிகளை விரைந்து செயல்படுத்துவதில் அனைத்துத்துறை அரசு அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

## கஜா புயல் புனரமைப்பு, மறுவாழ்வு மற்றும் புத்துயிர் திட்ட இயக்குநர் டாக்டர்.டி.ஜெகநாதன்.இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் கஜா புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்பு மற்றும் மறுவாழ்வு பணிகள் முன்னேற்றம் குறித்து அரசு அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சியரகத்தில் கஜா புயல் புனரமைப்பு, மறுவாழ்வு மற்றும் புத்துயிர் திட்ட இயக்குநர் டாக்டர்.டி.ஜெகநாதன்.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் இன்று (07.06.2019) நடைபெற்றது. கூடுதல் திட்ட இயக்குநர் திரு.ராஜகோபால் சுங்கரா.இ.ஆ.ப., அவர்கள் உடனிருந்தார்.

இக்கூட்டத்தில் கஜா புயல் புனரமைப்பு, மறுவாழ்வு மற்றும் புத்துயிர் திட்ட இயக்குநர் டாக்டர்.டி.ஜெகநாதன்.இ.ஆ.ப., அவர்கள் பேசியதாவது.

தமிழகத்தில் கஜா புயலால் பல்வேறு மாவட்டங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன. அந்த வகையில் புதுக்கோட்டை மாவட்டம் கஜா புயலால் அதிகம் பாதிக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் தமிழக அரசு பல்வேறு புனரமைப்பு பணிகளை மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில் புதுக்கோட்டை மாவட்டத்தில் பல்வேறு துறைகளின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் கஜா புயல் புனரமைப்பு மற்றும் மீட்புப் பணிகள் குறித்து தொடர்ச்சியாக ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

புயலால் வீடுகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு புதிய வீடுகள் கட்டித்தர தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இதன்படி புதிய வீடுகள் கட்டுவதற்கு அனுமதி ஆணை வழங்கிய விபரம் மற்றும் பணிகள் நடைபெறும் விபரம் குறித்து கேட்டறியப்பட்டதுடன் பட்டா இல்லாதவர்களுக்கு புதிய பட்டா வழங்கி வீடுகள் கட்டுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதேபோன்று நகர் பகுதிகளில் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்தின் சார்பில் வீடுகள் கட்டுவதற்குரிய இடத்தினை விரைவாக வழங்கவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வேளாண்மைத்துறையின் சார்பில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ள தென்னங்கன்றுகள் விபரம் குறித்து கேட்டறிந்து மீதமுள்ள விவசாயிகளுக்கும்

தென்னங்கன்றுகள் வழங்கவும், சொட்டுநீர் பாசனம், தெளிப்புநீர் பாசன கருவிகள், வேளாண் உபகரணங்கள் போன்றவற்றை மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. வேளாண் பொறியியல்துறையின் சார்பில் புயலின்போது சாய்ந்த மரங்களை முற்றிலும் அகற்றுவதற்கு உதவி செய்திடும் வகையில் குறைந்த வாடகையில் மரம் அறுக்கும் கருவிகள் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் சாலை வசதி, புதிய கட்டடங்கள் கட்டுதல், கட்டடங்கள் பழுது நீக்கம் போன்ற பல்வேறு பணிகளின் நிலைகள் குறித்தும் கேட்டறிந்து பல்வேறு துறைகளின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டுப் பணிகளை விரைவாக மேற்கொள்ள சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

தமிழக அரசின் சார்பில் புதுக்கோட்டை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் கஜா புயல் புனரமைப்பு பணிகளை விரைந்து செயல்படுத்துவதில் அனைத்துத்துறை அரசு அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு கஜா புயல் புனரமைப்பு, மறுவாழ்வு மற்றும் புத்துயிர் திட்ட இயக்குநர் டாக்டர்.டி.ஜெகநாதன் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் சாந்தி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மாலதி, வேளாண்மை இணை இயக்குநர் சுப்பையா உள்ளிட்ட அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**